## மெட்ரோ ரயில் நிலையங்களில்

# முகக்கவசம் அணியாத 27 பேருக்கு அபராதம்

■ சென்னை

மெட்ரோ ரயில் நிலையங்களில் முகக்கவசம் அணியாமல் வந்த 27 பேரிடம் ரூ.5,400 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கரோனா தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொதுமுடக்கத்தில் தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து கடந்த 21-ம் தேதி முதல் 50 சதவீத இருக்கை வசதிகளுடன் மெட்ரோ ரயில்கள் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன. கரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்காக பயணிகளின் பாதுகாப்பான பயணத்துக்கு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ரயில் நிலைய நுழைவாயில்களில் பயணிகள், பணியாளர்களுக்கு உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்படுகிறது. பயணிகளில் எவருக்கேனும் கரோனா அறிகுறி அல்லது அதிக உடல் வெப்பநிலை இருந்தால் அவர்கள் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்த அனுமதி மறுக்கப்படுகிறது.

கரோனா பரவலை தவிர்க்கும் விதத்தில் அனைத்து சுரங்க வழிப்பாதை ரயில் நிலையங்களிலும் 40 முதல் 70 சதவீதம் வரையிலான ஈரப்பதம் மட்டுமே பராமரிக்கப்படுகிறது.

ரயில்கள், கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது. பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியாவிட்டாலோ, ரூ.200 அபராதம் வசூலிக்கப்படுகிறது. கடந்த 21-ம் தேதி முதல் 29-ம் தேதி வரையில் 27 பயணிகளிடம் ரூ.5,400 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.